சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ம் நாள் புதன்கிழமை

**இ.நி.ம.எண்.03/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.14/2025**

ஆதிமூலம்

.... மனுதாரர்/பிரதிவாதி

**//எதிராக//**

ராமன்

.... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 01.12.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.அஜித்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுந்தரராஜன்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி அசல் வழக்கில் 14.07.2025 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மனுதாரர்கள்/5,6 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மனு/பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) மேற்படி மனுவில் தான் மனுதாரர், வழக்கில் பிரதிவாதி ஆவேன் என்றும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.28 17:07:16 +0530

மேற்படி தாவாவில் கடந்த 14.07.2025-ம் தேதியில் தாங்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி தினத்தில் தனக்கு கடுமையான உடல்நலகுறைவு ஏற்பட்ட காரணத்தால் தன்னை அழைக்கும் போது மாண்புமிகு நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கறிஞர் மூலம் படிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், பின் தாங்கள் வழக்கறிஞரை சந்தித்து பார்த்த போது தாங்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என அறிந்துக்கொண்டோம் என்றும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்றும், தங்களது சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டுள்ளது என்றும், தங்களுக்கு வழக்கில் நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும், தான் வழக்கில் எதிர்வாதம் செய்ய ஏதுவாக தனக்கு எதிராக 14.07.2025-ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தங்களுக்கு எதிராக கடந்த 14.07.2025-ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தக்க உத்தரவு பிறபிக்கவேண்டுமாய் கனம் நீதிமன்றத்தை பணிவுடன் பிராத்திக்கிறேன் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்/பிரதிவாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

3. **எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

(i) மனுதாரர்/பிரதிவாதியின் மனு பொய், மோசம் சட்டப்படி செல்லதக்கதல்ல தள்ளுண்டு போகத்தக்கதாகும். எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி வழக்கு 14.07.2025-ம் தேதியில் மனுதாரர் பதிலுரையை தாக்கல் செய்வதற்காக வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது என்பது உண்மை.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:20 +0530

(ii) அன்றைய தினம் மனுதாரர்/பிரதிவாதிக்கு கடுமையான உடல் நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரையை தாக்கல் செய்யவில்லை என கூறும் சங்கதி பொய்யாகும். மேற்படி வாய்தாவன்று மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வெளியே இருந்துக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகமால் வாதியை மிரட்டி சென்றுள்ளார் என்பது உண்மை. வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி பிரதிவாதி பதிலுரையை தாக்கல் செய்யாமல் இருந்தார் என்பதுதான் உண்மையாகும். மேற்படி பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.79/2024 என்ற வழக்கில் மட்டும் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி பிரதிவாதி இதனால் வரையில் நல்ல உடல் நலத்துடன் இருந்து வருகிறார் என்பது உண்மை. மேற்படி பிரதிவாதி ஆஜராகாததற்கு கூறும் காரணம் ஏற்புடையதல்ல. எந்த மருத்துவரின் சான்றிதழ்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. இதனால் இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். உண்மைக்கு புறம்பாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளார். ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து மேற்படி மனுவினை இந்த எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்/வாதி தனது பதிலுரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

**5.** மேற்படி அசல் வழக்கில் 14.07.2025 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மனுதாரர்கள்/5,6 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:24 +0530

**6.** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு, எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்யப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், கமேற்படி மனுவில் தான் மனுதாரர், வழக்கில் பிரதிவாதி ஆவேன் என்றும், மேற்படி தாவாவில் கடந்த 14.07.2025-ம் தேதியில் தாங்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி தினத்தில் தனக்கு கடுமையான உடல்நலகுறைவு ஏற்பட்ட காரணத்தால் தன்னை அழைக்கும் போது மாண்புமிகு நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கறிஞர் மூலம் படிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், பின் தாங்கள் வழக்கறிஞரை சந்தித்து பார்த்த போது தாங்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என அறிந்துக்கொண்டோம் என்றும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்றும், தங்களது சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டுள்ளது என்றும், தங்களுக்கு வழக்கில் நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும், தான் வழக்கில் எதிர்வாதம் செய்ய ஏதுவாக தனக்கு எதிராக 14.07.2025-ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தங்களுக்கு எதிராக கடந்த 14.07.2025-ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தக்க உத்தரவு பிறபிக்கவேண்டுமாய் கனம் நீதிமன்றத்தை பணிவுடன் பிராத்திக்கிறேன் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்/பிரதிவாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

**7.** எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர்/பிரதிவாதியின் மனு பொய், மோசம் சட்டப்படி செல்லதக்கதல்ல தள்ளுண்டு போகத்தக்கதாகும் என்றும், எதிர்மனுதாரர்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:28 +0530

ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மேற்படி வழக்கு 14.07.2025-ம் தேதியில் மனுதாரர் பதிலுரையை தாக்கல் செய்வதற்காக வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது என்பது உண்மை என்றும், அன்றைய தினம் மனுதாரர்/பிரதிவாதிக்கு கடுமையான உடல் நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரையை தாக்கல் செய்யவில்லை என கூறும் சங்கதி பொய்யாகும் என்றும், மேற்படி வாய்தாவன்று மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வெளியே இருந்துக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகமால் வாதியை மிரட்டி சென்றுள்ளார் என்பது உண்மை என்றும், வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி பிரதிவாதி பதிலுரையை தாக்கல் செய்யாமல் இருந்தார் என்பதுதான் உண்மையாகும் என்றும், மேற்படி பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.79/2024 என்ற வழக்கில் மட்டும் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி பிரதிவாதி இதனால் வரையில் நல்ல உடல் நலத்துடன் இருந்து வருகிறார் என்பது உண்மை என்றும், மேற்படி பிரதிவாதி ஆஜராகாததற்கு கூறும் காரணம் ஏற்புடையதல்ல என்றும், எந்த மருத்துவரின் சான்றிதழ்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், இதனால் இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்றும், உண்மைக்கு புறம்பாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளார் என்றும், ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து மேற்படி மனுவினை இந்த எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபனை செய்யப்பட்டது.

**8.** வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கானது 14.07.2025ம் தேதியில் பதிலுரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:33 +0530

ஆஜராக இயலவில்லை என்றும், அதனால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பகரப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு தங்கள் தரப்பு வழக்கை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதியதால் மனுதாரர்/பிரதிவாதி செலவுத்தொகையாக ரூ.2,000/-ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வரும் **28.01.2026 ம்** தேதி எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்தி அதற்கான குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமெனவும், அவ்வாறு செலுத்த தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனை அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டது. மேற்படி உத்தரவின்படி மனுதாரர்/பிரதிவாதி செலவுத்தொகை எதுவும் நீதிமன்ற உத்தரவுபடி செலுத்தவில்லை. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு நிபந்தனையின்படி மனுதாரர்/பிரதிவாதி செலவுத்தொகையை செலுத்தாத காரணத்தினால் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:42 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.28 17:07:46 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.